2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) சூரிய சக்தி மோட்டார் பம்ப் செட்டுகள் நிறுவுதல், சிறுதானியப் பயிர்களின் உற்பத்தியை உயர்த்தும் நடவடிக்கை, வாழை சாகுபடியில் நுண்ணீர் பாசன முறையினைக் கையாளுதல், காய்கறிகளைப் பாதுகாக்க உயர் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்தல், தோட்டக்கலை அறிவியல் சார்ந்த பட்டயப் படிப்பு துவங்குதல், ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் கட்டுதல் மற்றும் நீலகிரியில் இரு நூற்றாண்டு பசுமைப் புல்வெளி பூங்கா அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வேளாண்மைத் துறை: பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாகவும், விவசாயப் பெருமக்களின் வளமான வாழ்வுக்கு முக்கியமாக விளங்கும் வேளாண்மைத் தொழிலை மேம்படுத்துவதற்கும், விவசாயப் பெருமக்களின் வாழ்வு வளம் பெறச் செய்வதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில், கீழ்க்காணும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிக்கின்றேன்.

1. தமிழ்நாட்டில் அபரிமிதமாகக் கிடைக்கும் சூரிய சக்தியை, பல்வேறு வழிகளில் பயன்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு "சூரிய சக்திக் கொள்கை" ஒன்றை 2012 ஆம் ஆண்டில் உருவாக்கி, செயல்படுத்தி வருகிறது. இதுவரை, தமிழ்நாட்டில் 3,112 சூரிய சக்தி பம்ப் செட்டுகளும், 181 சூரிய உலர்ப்பான்களும், 117 கோடியே 24 இலட்சம் ரூபாய் மானியத்தில் நிறுவப்பட்டுள்ளன. இலவச மின் இணைப்பை ஏற்கெனவே பெற்றுள்ளவர்களும், இலவச மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்தவர்களும், மின் இணைப்பைத் துறப்பதற்கு முன்வந்தால், இத்திட்டத்தின்கீழ், 90 சதவிகித மானியத்தில் சூரிய சக்தி மோட்டார் பம்ப் செட்டுகள் அமைத்துத் தரப்படும்.

2018 ஜூன் 14] **[திரு. எடப்பாடி கே. பழனிசாமி]**

முற்பகல் 11–15

தற்போது விவசாயிகளிடையே, சூரிய சக்தி மோட்டார் பம்ப் செட்டுகளுக்கு அதிகத் தேவை இருப்பதைக் கருத்தில்கொண்டு, ஏற்கெனவே டெல்டா மாவட்டங்களுக்கு குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்துடன் அறிவிக்கப்பட்ட 500 சூரிய சக்தி மோட்டார் பம்ப் செட்டுகள் போக, டெல்டா மாவட்டங்கள் அல்லாத பிற பகுதிகளுக்கும் 500 சூரிய சக்தி மோட்டார் பம்ப் செட்டுகள் என (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தம் 1,000 சூரிய சக்தி மோட்டார் பம்ப் செட்டுகள் 50 கோடி ரூபாய் செலவில் 90 சதவீத மானியத்தில் நிறுவப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. உடல் நலத்துக்கு தேவையான அனைத்து ஊட்டச் சத்துக்களையும் வழங்கக்கூடிய சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, சாமை, வரகு, பனிவரகு மற்றும் குதிரைவாலி போன்ற சிறுதானியங்களின் தேவை தமிழகத்தில் அதிகரித்து வருகிறது.

எனவே, சிறுதானியப் பயிர்களின் உற்பத்தியை உயர்த்தும் வகையில், விதை உற்பத்தி மற்றும் விநியோகம், தொகுப்பு செயல் விளக்கம், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மற்றும் ஊட்டச் சத்து மேலாண்மை, சிறு தளைகள் விநியோகம் போன்ற பணிகளுக்காக, நடப்பாண்டில் 6 கோடியே 62 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. வாழை சாகுபடி பரப்பளவில் இந்திய அளவில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. வாழை அதிக நீர் தேவைப்படும் பயிராகும். தண்ணீர் பற்றாக்குறையினால், வாழை சாகுபடி பரப்பில் குறைவு ஏற்படக்கூடாது என்பதற்காக, வாழை சாகுபடியில் சிக்கன நீர் மேலாண்மைக்காக நடப்பாண்டில் வாழை சாகுபடி மேற்கொள்ளப்படும். 10,000 ஏக்கர் பரப்பளவில் நுண்ணீர் பாசன முறையினை அமைப்பதற்கு விவசாயிகளுக்கு மானியமாக 27 கோடியே 83 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. உயர் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்தல்மூலம் தரமான உற்பத்தி உறுதி செய்யப்படுகிறது. காய்கறிகளை பசுமைக்குடில், நிழல் வலைக்குடில் போன்ற பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிரிடுதல், ஏறுகொடிகள் மற்றும் பற்று கொடிகளான காய்கறி மற்றும் பழங்களுக்கு ஆதாரமாக பந்தல் அமைத்தல், நிலப்போர்வை அமைத்தல் போன்ற தொழில்நுட்பங்களை மேற்கொள்ள 10 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. தோட்டக்கலைத் துறையில் பட்டயப் படிப்பு படித்த மாணவர்களுக்கு சிறந்த வேலைவாய்ப்புகள் உள்ளன. தற்சமயம் சென்னையை அடுத்த மாதவரத்தில் மட்டுமே, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறைமூலம் இப்பட்டயப் படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது. எனவே, அதிகமான மாணவர்களுக்கு இப்பட்டயப் படிப்பு அளிக்க, கிருஷ்ணகிரி மாவட்டம், தளியில் செயல்பட்டு வரும் தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்திலும், திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரத்தில் இயங்கிவரும் காய்கறி மகத்துவ மையத்திலும், தோட்டக்கலை அறிவியல் சார்ந்த ஈராண்டு பட்டயப் படிப்பு நடப்புக் கல்வி ஆண்டில் துவங்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) ஆண்டுதோறும் ஒவ்வொரு மையத்திலும் 50 மாணவர்கள் சேர்க்கப்படுவர். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் இணைப்பு அங்கீகாரம் பெற்ற இம்மையங்களிலும் தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறைமூலம் செயல்படுத்தப்படும். இவ்விரண்டு மையங்களிலும், மாணவர்கள் பயில்வதற்காக ஏற்கெனவே உருவாக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடுதல் வசதிகளை உருவாக்குவதற்கு இரண்டு கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், திருவள்ளூர் மாவட்டம், மாதவரத்தில் இயங்கிவரும் ஈராண்டு தோட்டக்கலை பட்டயப் படிப்பு மையமும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் இணைப்பு அங்கீகாரம் பெற்று, தோட்டக்கலைத் துறையின்மூலம் நடத்தப்படும்.

6. வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை, விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று போன்ற வேளாண் சார்ந்த அனைத்துத் துறைகளின் விரிவாக்க சேவைகளையும் ஒரே இடத்தில் விவசாயிகளுக்கு வழங்கும் வகையில், அனைத்துத் துறை அலுவலர்களும் ஒரே இடத்தில் இயங்குவதற்கேற்ப, இடுபொருள் சேமிப்புக் கிடங்கு, கருத்தரங்கக்கூட வசதிகளுடன்கூடிய ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் இதுவரை 146 வட்டாரங்களில் 219 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன. நடப்பாண்டில், மேலும் 9 வட்டாரங்களில் இம்மையங்கள் 18 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. “மலைகளின் ராணி” என அழைக்கப்படும் உதகமண்டலம், 200 ஆண்டு காலம் பழமை வாய்ந்ததுடன், பிரதான சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. தற்போது செயல்பட்டுவரும் தாவரவியல் பூங்காவுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு,

நடப்பாண்டில், நீலகிரி மாவட்டத்தில் 80 ஏக்கர் பரப்பளவில் புதிதாக “இரு நூற்றாண்டு பசுமைப் புல்வெளி” என்னும் புதிய பூங்கா ஒன்று 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், வருடந்தோறும், சுமார் 10 இலட்சத்திற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் அரசு ரோஜாப் பூங்காவிற்கு வருகை புரிவதால், போக்குவரத்து நெரிசல் அதிகமாகி, வாகனம் நிறுத்துவதற்கு மிகுந்த சிரமம் ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, நீலகிரி நகரத்தில் 500 வாகனங்களை நிறுத்தும் வகையில் வாகன நிறுத்துமிடம் 3 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆக, மொத்தம் 127 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இன்று நான் அறிவித்துள்ள இத்திட்டங்கள்மூலம் தமிழ்நாடு வேளாண்மையும், விவசாயிகளின் வாழ்வாதாரமும் மேலும் செழிக்க வழிவகை ஏற்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–20

(ஆ) கைத்தறி மற்றும் பெடல் தறிகளுக்கான கூடுதல் உற்பத்தித் திட்டம், பன்னாட்டு ஜவுளிக் கண்காட்சி நடத்துதல், சாயமிடும் அலகுகள் அமைத்தல், பல்நிலை குளிர்பதன அலகு மற்றும் பட்டு நூற்பு அலகுகள் நிறுவுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைக்கு அடுத்தபடியாக ஊரகப் பகுதி மக்களின் வாழ்வாதாரமாக விளங்குவதிலும், நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை உருவாக்குவதிலும், நாட்டின் ஏற்றுமதி வருவாயைப் பெருக்குவதிலும் முக்கியப் பங்கு வகிப்பது நெசவுத் தொழில். இப்படிப்பட்ட இன்றியமையா தொழிலான நெசவுத் தொழிலின் வளர்ச்சிக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு முன்னுரிமை அளித்து, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. அதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் இத்துறை குறித்த பின்வரும் அறிவிப்புகளை இப்பேரவையில் அறிவிக்கின்றேன்:

1) விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதை உறுதி செய்தல் மற்றும் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்களின் துணித் தேவையினைப் பூர்த்தி செய்தல் ஆகிய இரு நோக்கங்களை நிறைவேற்றும்பொருட்டு, ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து கைத்தறிகள் மற்றும்